# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஜனாதிபதியின் செயலாளர்,

பிரதமரின் செயலாளர்,

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண சபை பிரதம செயலாளர்கள்,

நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்,

**ஜனாதிபதித் தேர்தல் - 2024**

**அரச சேவை, மாகாண அரச சேவை மற்றும் நியதிச் சட்ட சபை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பான விதிமுறைகள்.**

இலங்கை அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரைப் பிரகாரம் குடியரசிலிருந்து சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் "அரச உத்தியோகத்தர்கள்" என பொருள் கொள்ளப்பட்டுள்ளனர். இது குற்றவியல் சட்டக் கோவையின் 19 ஆவது பிரிவினூடாக மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்பின் 4 ஆவது உறுப்புரைப் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை மதிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டுள்ளனர். அத்துடன் அரசியலமைப்பின் 6 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் அரசியலமைப்புக்கு அமைவாக செயற்படுவதாக உறுதிமொழி எடுத்துள்ளனர். அரசியலமைப்பின் 12 வது உறுப்புரைப் பிரகாரம் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதுடன் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உற்படுதல் வேண்டும்.

வாக்களிப்பதற்கான உரிமையை உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமையொன்றாக உறுதி செய்துள்ளது. அதற்கிணங்க தேர்தலொன்று நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில், வலுப்பெறும் தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள் மற்றும் நாட்டின் அரசியலமைப்பிற்கிணங்க அந்தத் தேர்தல் நடாத்தப்படுவதனை உறுதிசெய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளதுடன், மேலும் ஒவ்வொரு விடயத்திற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் அந்த சட்டங்களுக்கமையவாக் தங்கள் கடமைகளை நியாயமானதாகவும் பக்கச் சார்பின்றியும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

அரச உத்தியோகத்தர்கள் கட்டுப்பட்டுள்ள சட்ட ரீதியிலான பொறுப்பொன்றை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது சட்ட வரம்பிற்கு அப்பால் செயற்படுவதனைப் போன்றே மேற்கொள்ள வேண்டிய அலுவலை மேற்கொள்ளாதிருத்தலும், நியாயமான காரணமின்றித் தட்டிக்கழித்தலும், தேவையற்ற விதத்திலான தாமதப்படுத்தலும் அரசியலமைப்பிற்கமைய அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். அதற்கிணங்க, அரசாங்க உத்தியோகத்தர்கள்

அத்தகைய அடிப்படை உரிமைகளை மீறும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எதிராக புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடாத்துவதற்கு மற்றும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்திற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

அதற்கிணங்க, ஆணைக்குழுவினால் இந்தத் தேர்தல் காலப் பகுதியில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடாத்துவதற்காக அரச உத்தியோகத்தர்கள் தமது பொறுப்புக்களை உரிய பிரகாரம் நிறைவேற்றுகின்றார்களா? என்பதனை ஆணைக்குழுவினால் கண்காணிப்புக்குட்படும். அத்தோடு, தேவையான சந்தர்ப்பங்களில் அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறலின் கீழ் புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடாத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, நீங்கள் உட்பட உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் நிலவும் நிறுவனங்களின் பணியாட்குழு அங்கத்தவர்களுக்கு கீழே குறிப்பட்டுள்ளபடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத் தருகின்றோம்.

- சட்டத்திற்கிணங்க அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும். எந்தவொரு அரசியல் கட்சியையும் அல்லது எந்தவொரு வேட்பாளரையும் ஊக்குவிக்கும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான எந்தவொரு செயலையும் செய்தல் அல்லது செய்யாமல் இருத்தல் இலங்கை அரசியலமைப்பின் 12 வது உறுப்புரையை மீறுவதாகும்.

- சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை, ஒரு தரப்புக்கு நன்மை பயக்கும் வகையில் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல் (உ- ம்:- தேர்தல் சட்டங்களை மீறி சில அரசியல் கட்சிகளுக்கு / குழுக்களுக்கு பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதற்கு இடமளித்தல்) மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும். சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையின் காரணமாக ஏற்படும் உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கத்தின் பொறுப்புக்கு மேலதிகமாக, அந்த உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பை ஏற்க வேண்டும்.

இந்த அறிவித்தலானது 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்திற்கமைய விடுக்கப்படுகின்றதென்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.

**எல்.ரீ.பி.தெஹிதெனிய**
உயர் நீதிமன்ற நீதியரசர் (முன்னாள்)
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

Justice L.T.B.Dehideniya
Judge of the Supreme Court (Retired)
Chairman
Human Rights Commission of Sri Lanka

2024 யூலை 31